2014 டிசம்பர் 5]

*மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்–விடைகள் என்று உள்ள சட்டப் பேரவை விதி 32-ஐ 8-12-2014 திங்கட்கிழமை அன்று தளர்த்தி அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்”

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘ஆம்’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘இல்லை’ என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

8–12–2014 அன்று வினாக்கள்–விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் திங்கட்கிழமை (8–12–2014) காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 5–05 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

7. 2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நாற்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

8. 2012–2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் முப்பத்து ஐந்தாவது ஆண்டறிக்கை. [1956–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

[2014 டிசம்பர் 5

9. 2013–2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் நாற்பதாவது ஆண்டறிக்கை. [1956–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

3. 2014–2015 ஆம் ஆண்டின் "கூடுதல் செலவுக்கான" மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

4. 2014–2015 ஆம் ஆண்டின் கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகளும், விரிவான துணை மதிப்பீடுகளும். (தமிழ், ஆங்கிலம்)

5. 2014–2015 ஆம் ஆண்டின் இரண்டாவது துணை மதிப்பீடுகள் குறித்து மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)

6. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (பத்தாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

7. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (பதினொன்றாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

8. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (பன்னிரண்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

9. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் பட்டியல். (பதின்மூன்றாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

*****